**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**முன்னிலை: திருமதி.S.சுசீலா, பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி, சத்தியமங்கலம்**

**2025-ம் வருடம் நவம்பர் மாதம் 27- ம் நாள் வியாழக்கிழமை**

**(2056 திருவள்ளுவராண்டு ஸ்ரீவிசுவாவசு வருடம் கார்த்திகை மாதம் 11-ம் நாள்)**

**இ.ம.எண்.9/2025 மற்றும் இ.ம.எண்.10/2025**

**அசல் வழக்கு எண்.186/2019**

1. பசவண்ணா
2. மணியா ..... மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

/எதிர்/

மகேந்திரன் என்பவருக்கு பவர்
ஏஜெண்ட் மணி ..... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனுவானது கடந்த 24.11.2025 தேதியன்று இறுதியாக என் முன்னிலையில் விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.ராஜா, அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.P.M.சங்கீதா, அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு இருந்துவந்து இன்று கீழ்கண்டவாறு வழங்கும்.,

**பொதுவான உத்தரவு**

இம்மனுவானது, மனுதாரர்கள் தரப்பில் முடிக்கப்பட்ட வாதி தரப்பு சாட்சியை மறுதிறவு செய்து, மீண்டும் PW1 சாட்சியை மீண்டும் விசாரணை செய்ய அழைக்க உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்.**

அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள் / வாதிகளால், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கானது வாதி தரப்பில்

குறுக்குவிசாரணைக்காக நிலுவையில் இருந்த நிலையில், கடந்த 11.09.2025-ம் தேதியன்று மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை. எனவே, மனுதாரர்கள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். எனவே, வா.சா.1- சாட்சியத்தை மீண்டும் அழைத்து, குறுக்குவிசாரணை செய்யாவிட்டால் பெருத்த இழப்பு ஏற்படும் என்பதால், 11.09.2025-ம் தேதியில் மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து, வா.சா.1 சாட்சியை மீண்டும் அழைத்து விசாரணை செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனு மோசடியானது, சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் வேண்டுமென்றே வழக்கை காலதாமதப்படுத்தும் நோக்கில் மனுதாக்கல் செய்துள்ளார்கள். வழக்கில் வா.சா.1-ஐ குறுக்குவிசாரணை செய்ய வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், குறுக்குவிசாரணை செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பித்த பின்பு மீண்டும் மனு தாக்கல் செய்துள்ளார்கள். பொய்யான காரணங்கள் கூறி தாக்கல் செய்துள்ள மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. இருதரப்பிலும் சாட்சிய, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கப்படவேண்டுமா ? என்பதேயாகும்.

**5. தீர்வு**

5.1 அசல் வழக்கானது, எதிர்மனுதாரர்/வாதியால், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தற்போது அசல் வழக்கு வா.சா.1-ஐ குறுக்குவிசாரணை செய்வதற்காக நிலுவையில் உள்ளது. மனுதாரர்கள் தரப்பில், வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய கடந்த 11.09.2025-ம் தேதியன்று வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை எனவும், எனவே மனுதாரர்கள் 11.09.2025-ம் தேதிய ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்ய வேண்டும் எனவும், மனுதாரர்கள் தரப்பில் முடிக்கப்பட்ட வாதி தரப்பு சாட்சியை மறுதிறவு செய்து, மீண்டும் PW1 சாட்சியை மீண்டும் விசாரணை செய்ய வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.2** எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையல்ல. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் உண்மையல்ல எனவும், இரண்டு மாதங்கள் வாய்தா வழங்கியும் மனுதாரர்கள் ஆஜராகவில்லை எனவும், வழக்கை காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்திலும், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடாது என்ற நோக்கத்திலும் பொய்யாக மனுவை தாக்கல் செய்ய வேண்டும் என எதிர்மனுவுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.3** மனு மற்றும் எதிருரையை காணும்போது மனுதாரர்கள் மனுவில் கடந்த 11.09.2025 தேதி ஒருதலைபட்ச உத்தரவு வழங்கப்பட்டதாக குறிப்பிட்டு, உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் மனுதாரதால் ஆஜராக முடியவில்லை எனவும், எனவே கடந்த 11.09.2025-ம் தேதியில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரி மனுதாரர் தரப்பில் வாதம் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில், மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் உண்மையல்ல எனவும், வழக்கினை இழுத்தடிக்க வேண்டுமென இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.4** அசல் வழக்கின் ஆவணங்களை காணும்போது தாவா சொத்து எதிர்மனுதாரர் / வாதியின் சுவாதீன அனுபவத்தினை இடையூறு செய்யும் விதமாக, பிரதிவாதிகள் அத்துமீறி நுழையக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், மனுதாரர்கள் தரப்பில் 11.09.2025-ல் ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்ய இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் / பிரதிவாதி, மனுதாரகள் வழக்கை நடத்த இரண்டு மாதங்கள் வாய்தா வழங்கியும் ஆஜராகாமல் இருந்து வந்ததால், மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. எனவே, அசல் வழக்கை மீண்டும் வாதி தரப்பு சாட்சியத்திற்காக மறுதிறவு செய்து, வா.சா.1 ஐ குறுக்குவிசாரணை செய்ய மீண்டும் அழைக்க வேண்டி மனுதாரர்கள் கூறியுள்ள காரணம் போதுமானதாகவும், ஏற்கும்படியானதாகவும் இல்லை. இருப்பினும் நீதியின் நலனை கருத்திற்கொண்டு இருதரப்பு வழக்கினை நிரூபிக்க வாய்ப்பு வழங்கி இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் தீர்மாணிக்கிறது. இருப்பினும், மனுதாரர்களின் அலட்சியத்தால் எதிர்மனுதாரர் / வாதிக்கு ஏற்பட்ட இழப்பு மற்றும் காலதாமதத்தை ஈடு செய்யும் வகையில் மனுதாரர்களின் மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியாக,**

**1) மனுதாரர்கள் / பிரதிவாதிகள், எதிர்மனுதாரர் / வாதிக்கு இம்மனுவின் செலவுத்தொகையாக ரூ.500/-ஐ வரும் 08.12.2025-ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.**

**2) தவறும் பட்சத்தில் இம்மனுவானது மேற்கொண்டு எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படாமல் தள்ளுபடி செய்யப்படும்**

**மீண்டும் அழைக்க 08.12.2025**

இந்த உத்தரவு சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழை திருத்தம் செய்து இன்று 2025-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் நாள் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.27 06:09:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

மனுதாரர் எதிர்மனுதாரர் இருதரப்பிலும்
சாட்சி சான்றாவணங்கள் தாக்கல் இல்லை.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.27 06:09:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சத்தியமங்கலம்.

FAIR ORDER

I.A.9/2025 &

I.A.10 / 2025

in

O.S.186/2019

27.11.2025